## மேனிலை இரண்டாம் ஆண்டு

## அரசியல் அறிவியல்

## மாதிரி வினாத்தாள் – 2

நேரம் : 2.30 மணி மதிப்பெண் : 90

### பகுதி - அ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 X 1 = 20

1. கிரேக்க நாட்டில் நகர அரசு தோன்றிய ஆண்டு
   (அ) கி.மு. 1000 (ஆ) கி.பி 1000
   (இ) கி.மு.500 (ஈ) கி.பி.500

2. 'அதிக அளவில் சமூக சேவைகளும் பாதுகாப்பையும் அளிப்பதே மக்கள் நல அரசாகும்' என்று கூறியவர்
   (அ) ஜி.டி.எச்.கோல் (ஆ) நேரு
   (இ) T.W. கென்ட் (ஈ) அமர்த்தியா சென்

3. எல்லாக் கொள்கைகளிலும் மிகவும் பழமையான அரசுத் தோற்றக் கொள்கை எது?
   (அ) சமூக ஒப்பந்தக் கொள்கை (ஆ) வலிமைக் கொள்கை
   (இ) தெய்வீகத் தோற்றக் கொள்கை (ஈ) பரிணாமக் கொள்கை

4. சமுதாய ஒப்பந்தக் கொள்கைக்குத் தர்க்க ரீதியான விளக்கம் தந்தவர் யார்?
   (அ) ரூசோ (ஆ) ஜான் லாக்
   (இ) தாமஸ்ஹாப்ஸ் (ஈ) ஹீக்கர்

5. 'உயர்குடி வகுப்பினர் இல்லாக் கோட்பாட்டை' விளக்கியவர்
   (அ) காரல் மார்க்ஸ் (ஆ) பிரிட்டோ
   (இ) மாக்ஸ் வீபர் (ஈ) ராபர்ட் மைக்கேல்

6. நாம் அன்றாட வாழ்க்கையில் காண்பது
   (அ) பெரு அரசியல் (ஆ) சிறு அரசியல்
   (இ) சிறு அளவுப் பகுப்பாய்வு (ஈ) பெரு அளவுப் பகுப்பாய்வு

7. உலகமயமாக்கப்படல் எதனை அறிவுறுத்தியது?
   (அ) பொருளாதார ஒருங்கிணைப்பு (ஆ) அரசியல் ஒருங்கிணைப்பு
   (இ) சமூக ஒருங்கிணைப்பு (ஈ) மேற்கூறிய அனைத்தும்

8. A.V.டைசின் கருத்துப்படி இறைமைக்கு எத்தனை விதமான எல்லைத் தடைகள் உள்ளன.

(அ) 3 (ஆ) 5
(இ) 2 (ஈ) 4

9. எந்த நாட்டில் குழு முறை அரசாங்கம் பின்பற்றப்படுகிறது?
(அ) அமெரிக்கா (ஆ) இந்தியா
(இ) சீனா (ஈ) சுவிட்சர்லாந்து

10. இந்திய லோக் சபா எவ்வாறு அழைக்கப்படுகிறது
(அ) கீழவை (ஆ) மேலவை
(இ) பிரதிநிதிகள் மன்றம் (ஈ) பொதுமக்கள் அவை

11. பென்தாம் என்பவர் ஒரு
(அ) நீதிபதி (ஆ) அரசியல்வாதி
(இ) சமூகச் சீர்திருத்த அறிஞர் (ஈ) ஆசிரியர்

12. பெண்களை முதன்முதலில் நீதிபதிகளாக நியமித்த அமெரிக்கக் குடியரசுத் தலைவர் யார்?
(அ) உட்ரோ வில்சன் (ஆ) ஆப்ரகாம் லிங்கன்
(இ) கென்னடி (ஈ) ரொனால்ட் ரீகன்

13. 42-வது சட்டத் திருத்தம் நடைமுறைக்கு வந்த ஆண்டு
(அ) 1947 (ஆ) 1976
(இ) 1967 (ஈ) 1950

14. இந்திய அரசியலமைப்பின் வரைவுக் குழுவின் தலைவர் யார்?
(அ) காந்தி (ஆ) B.R.அம்பேத்கார்
(இ) நேரு (ஈ) டாக்டர் இராஜேந்திர பிரசாத்

15. ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலத்திற்கான தனி அரசியலமைப்பு விதி எது?
(அ) விதி 370 (ஆ) விதி 153
(இ)விதி 163 (ஈ) விதி 170

16. இந்திய நிர்வாகத்தின் அடிப்படை அலகாக உள்ளது எது?
(அ) கிராமம் (ஆ) நகராட்சி
(இ) மாவட்டம் (ஈ) மாநிலம்

17. யாருடைய அறிக்கை பஞ்சாயத்து இராஜ்ய முறையின் மகா சாசனம் எனப் புகழப்படுகிறது?
(அ) அசோக் மேத்தா (ஆ) பல்வந்தராய் மேத்தா
(இ) சர்தார் வல்லபாய் படேல் (ஈ) ஜவஹர்லால் நேரு

18. தமிழ்நாட்டில் உள்ள நகரீயத்துக்கு எடுத்துக்காட்டு
(அ) நெய்வேலி (ஆ) சேலம்
(இ) தருமபுரி (ஈ) நீலகிரி

19. உடோப்பியா என்ற நூலை எழுதியவர் யார்?

(அ) மு.வரதராஜன் (ஆ) நேரு

(இ) தாமஸ் மூர் (ஈ) ஏ.பி.ஜே அப்துல்கலாம்

20. பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்

(அ) 1951-56 (ஆ) 1980-85

(இ) 2002-07 (ஈ) 2012-17

**பகுதி – ஆ**

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி வினா எண் 30க்குக் கட்டாயமாக விடையளிக்கவும்** **7 X 2 =14**

21. அரசியல் சட்டவிதி 41 கூறுவது யாது?

22. தாய்வழிக் கொள்கைக்கு விளக்கம் அளித்தவர்களில் முதன்மையானவர்கள் யாவர்?

23. ‘புதிய அரசியல் அறிவியல்’ என்றால் என்ன?

24. உலகமயமாக்கலின் இரண்டு ஆணிவேர்கள் யாவை?

25. அரசாங்கத்தின் மூன்று அங்கங்கள் யாவை?

26. நீதித்துறை குறித்து எழுதுக.

27. அமைச்சரவை – குறிப்பு எழுதுக.

28. ஆளுநராகத் தகுதிகள் யாவை?

29. கிராம சபை பற்றி குறிப்பு எழுதுக

30. தேசிய வருமானம் என்றால் என்ன?

**பகுதி – இ**

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளி வினா எண் 31க்குக் கட்டாயம் விடையளிக்கவும்** **7 X 3 = 21**

31. மக்கள் நல அரசின் சாதகத் தன்மைகள் யாவை?

32. தாய்வழிக் கொள்கையை விளக்குக.

33. ஆளுமை என்றால் என்ன?

34. செய்தி தொடர்பு தொழில்நுட்பம் – வரையறு.

35. பெயரளவிலான செயற்குழு என்பதை விளக்குக.

36. நீதிபதியாக நியமிக்கப்படுபவர்களின் தகுதிகள் யாவை?

37. மக்களவை, மாநிலங்களவைகளின் வேறுபாடுகள் ஏதேனும் மூன்றினை எழுதுக.

38. ஆளுநரின் அரசியலமைப்பு நிலையை எழுதுக.

39. நகர எல்லைப்பகுதி குழு பற்றி விவரிக்க.

40. இந்தியாவில் தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றிக் குறிப்பு வரைக.

**பகுதி – ஈ**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி** 7 X 5 = 35

41. நிலப்பிரபுத்துவ அரசின் எழுச்சியை ஆய்வு செய்க.

(அல்லது)

ஹாபிஸ், லாக், ரூஸோ ஆகியோரின் சமுதாய ஒப்பந்தக் கொள்கையை மதிப்பீடு செய்க

42. அதிகாரத்தின் பொருள் விளக்கத்தினை தருக.

(அல்லது)

பன்னாட்டு நிதிக்கழகம் மற்றும் உலக வங்கியின்சிறப்புத் திட்டங்கள் யாவை?

43. நீதி மறு ஆய்வின் நிறை குறைகள் யாவை?

(அல்லது)

தலைவர் முறை அரசாங்கத்தின் நிறை குறைகள் யாவை?

44. இந்தியப் பிரதமரின் பங்கு, பணியினை விவரிக்க

(அல்லது)

குடியரசுத்தலைவரின் நிதி மற்றும் நிர்வாக அதிகாரங்கள் யாவை?

45. தலைமைச் செயலரின் பணிகள் யாவை?

(அல்லது)

மாவட்ட அளவிலாள முக்கிய பணியாளர்கள் யாவர்?

46. மாநகராட்சியின் பணிகள் யாவை?

(அல்லது)

கிராமப் பஞ்சாயத்தின் வருவாய் ஆதாரங்கள் யாவை?

47. இந்திய அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் யாவை?

(அல்லது)

நிர்வாகச் சீர்திருத்த ஆணையம் பற்றி விவரி.